## 6 முதல் 12 – ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று

# உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000!

## தூத்துக்குடியில் புதுமைப் பெண் திட்ட விரிவாக்கத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 31-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந் தோறும் ரூ.1000/ உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 10 மாணவிகளுக்கு பற்றட்டைகளை (Debit Card) வழங்கினார்.**



முதலமைச்சர் அவர்கள், பெண்களின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தொடர்ச்சியாக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். கல்வி கற்ற பெண்களால் மட்டுமே சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பொருளாதார முன்னேற்றம் அடைந்த சமுதாயத்தினரை உருவாக்கிட இயலும் என்பதை உணர்ந்த நம் முதலமைச்சர் அவர்கள், பெண்களின் உயர்கல்வி மேம்பாட்டிற்கான வரலாற்றுச் சாதனை திட்டமான புதுமைப் பெண் திட்டத்தினை 5.9.2022 அன்று தொடங்கி வைத்தார்.

**புதுமைப் பெண் திட்டம்!**

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப் படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000/ வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் துவங்கப்பட்டது முதல் தற்போது வரை கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயின்ற மாணவிகள் உட்பட சுமார் 4.25 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் டிசம்பர்2024 மாதத்தில் 2.98 இலட்சம் மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த 370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டது முதல், உயர்கல்வி நிறுவனங்களில் பெண்களின் சேர்க்கையை அதிகரிப்பதில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

**தமிழ்ப் புதல்வன் திட்டம்!**

தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சியைப் பெருக்குவதிலும், இளைஞர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்புகளை உயர்த்திடவும் மிகுந்த அக்கறை செலுத்தி வரும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல்வியை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டமானது மாபெரும் வெற்றியைப் பெற்றதையடுத்து, அரசுப் பள்ளி மாணவர்களின் உயர் கல்வி சேர்க்கையை ஊக்குவித்திடவும், அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியில் சேர்ந்து படித்து வரும் அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத் தொகை வழங்கும் ”தமிழ்ப்புதல்வன்” என்னும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.8.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டமானது வறுமை இல்லாத, சமத்துவம் வாய்ந்த ஒரு அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கிடவும், கல்வி கற்கும் மாணவர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்த்திடவும், கற்கும் ஆர்வத்தை மெருகேற்றிடவும், பெற்றோரின் பொருளாதாரச் சுமைகளைக் குறைத்திடவும், குடும்பத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தகைய உயரிய நோக்கம் கொண்ட இத்திட்டத்தின் கீழ் சுமார் 3.52 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம்!**

உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்காக ஏற்கனவே தமிழ்நாடு அரசால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கமாக, அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/உதவித் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு. தொழிற் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர்கல்வி படிப்புகள் படிக்கும் மாணவியர்கள் பயன்பெறுவர்.

அதேபோன்று பிற மாநிலங்களில் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் IIT, NIT, IISER போன்ற தகைசால் கல்வி நிறுவனங்களில் பயிலும் அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவிகளும் இத்திட்டத்தில் பயன் பெறுவர்.

வருமான உச்சவரம்பு ஏதுமின்றியும், மற்ற கல்வி உதவித் தொகை திட்டங்களின் பயன் பெற்று வந்தாலும் (BC /SC/ST/ Minority Scholarship) மற்றும் ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இருந்தாலும் இந்த திட்டங்களின் கீழ் பயன்பெறலாம் என்பது கூடுதல் சிறப்பம்சமாகும்.

இந்த சமூகத்தில் பெண்களுக்கு எந்தவிதமான வாய்ப்பினை வழங்குகிறோமோ, அந்த விதமான தலைமுறையைத்தான் உருவாக்க இயலும் என்பதற்கேற்ப, அடுத்த தலைமுறை முன்னோக்கிச் செல்ல மிக முக்கியமான திட்டமான புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் தற்போது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று, உயர்கல்வி பயிலும் மாணவிகள் சுமார் 75,028 பேர் இணைய உள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ், உயர் கல்வி மூலம் பெறும் அறிவும், பொருளாதார சுதந்திரமும், மாணவிகளின் தன்னம்பிக்கையை அதிகரித்து, அவர்களது வாழ்க்கையில் புதிய வாய்ப்புகளைத் தேட ஊக்குவிப்பதோடு, சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் பெண்களின் பங்களிப்பினை உறுதி செய்யும் வாய்ப்பாக அமைகிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புவாய்ந்த மகத்தான திட்டமான ”புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கமானது” நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் மாணவிகளுக்கு பற்றட்டைகளை வழங்கி தொடங்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் சுமார் 4,680 மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர்.

அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களால் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது.

இவ்விழாவில், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.மார்க்கண்டேயன், சி.சண்முகய்யா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பி. ஜெகன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி ஆர். லில்லி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### இல்லாத ஒன்றைக் கேட்டு – அரசியல் ஆதாயத்திற்காக

## எடப்பாடி பழனிசாமி போராட்ட நாடகத்தை நடத்துகிறார்!

### அமைச்சர் கோவி.செழியன் பதிலடி!

சென்னை, டிச. 31-

பாதிக்கப்படும் பெண்கள் இப்பொழுது துணிச்சலாக புகார் தருகிறார்கள். அவர்களை மீண்டும் அச்சுறுத்தும் விதமாகத் தான் எடப்பாடி பழனிசாமியின் அறிக்கை அரசியலையும் போராட்ட நாடகத்தையும் மக்கள் பார்க்கிறார்கள் என

உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் எடப்பாடி பழனிசாமிக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் கோவி.செழியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:-.



முதலமைச்சராக இருந்த போது 13 அப்பாவி பொதுமக்களைக் காக்கைக் குருவிகளைச் சுடுவதைப் போல சுட்டுக் கொன்றதையே டி.வி.யைப் பார்த்து தெரிந்து கொண்ட எடப்பாடி பழனிசாமி இன்னும் திருந்தாமல் பத்திரிகைகளில் வந்த கிசுகிசுவை அடிப்படையாக வைத்து போராட்டம் என்ற பெயரில் மக்களை வாட்டி வதைக்கிறார்.

திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் உயர்கல்வி பயில்வது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதைச் சிதைக்கும் வகையில் ‘சார் யார்?’ என்று இல்லாத ஒன்றைக் கேட்டு அரசியல் ஆதாயம் தேடுகிறார்.

இன்று கூட திராவிட மாடல் அரசின் முன்னோடி திட்டமான புதுமைப்பெண் திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று முடித்து உயர்கல்வி பயில்வோருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாலியல் புகார்களில் பெண்கள் காவல்துறையினரிடம் புகார் அளிக்கவே அஞ்சி நடுங்கிய நிலை திராவிட மாடல் ஆட்சியில் மாற்றப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்கள் துணிச்சலாக புகார் தருகிறார்கள். அவர்களை மீண்டும் அச்சுறுத்தும் விதமாகத்தான் எடப்பாடி பழனிசாமியின் அறிக்கை அரசியலையும் போராட்ட நாடகத்தையும் மக்கள் பார்க்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### கல்வி வாசிப்பை – பதிப்புப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில்

## பதிவுப் புத்தக அஞ்சல் சேவையை செயல்பாட்டிற்கு கொண்டு வருக!

### ஒன்றிய அமைச்சருக்கு பி.வில்சன் எம்.பி. வேண்டுகோள்!

சென்னை, டிச. 31-

கல்வியையும் வாசிப்பையும் பதிப்புப் பணியையும் ஊக்குவிக்கும் வகையில் இயங்கிக் கொண்டிருந்த பதிவுப் புத்தகத் தபால் (Registered Book Post) சேவையை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் தனது X சமூக வலை தளம் வாயிலாக ஒன்றிய அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பி.வில்சன் தன்னுடைய பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது..

ஒன்றிய அமைச்சர் அவர்கள், டிசம்பர் 6, 2024 அன்று, தபால் துறையின் நவீனமயமாக்கல் குறித்த நாடாளுமன்றத் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இருப்பினும், இந்திய தபால் துறையின் மிகவும் மதிப்புமிக்க சேவைகளில்



ஒன்றான பதிவு புத்தக தபால் சேவையை நிறுத்துவதற்காக முன்மொழியப்பட்ட முடிவு குறித்து அமைச்சர் எதுவும் குறிப்பிடவில்லை.

இந்தியத் தபால்துறையின் ஊழியர்கள் உட்பட பங்குதாரர்களுடன் ஆலோசனைகள் அல்லது முன்னறிவிப்புகள் ஏதுமின்றி இந்தச் சேவை டிசம்பர் 18, 2024 அன்று அஞ்சல் துறையின் மென்பொருளில் இருந்து திடீரென அகற்றப்பட்டுள்ளது.

இந்தப் பதிவுப் புத்தகத் தபால் சேவையின் வாயிலாக புத்தகங்கள், அட்டைகள், பத்திரிகைகள், அனைத்து வகையான வெளியீடுகள், காகிதம், தாள்கள், இரசீதுகள், விலைப்பட்டியல்கள், அறிக்கைகள், வணிக, சட்ட அல்லது தனிப்பட்ட இயல்புடைய எந்தவொரு ஆவணமும் ஒற்றை அல்லது பல பிரதிகளில், நிபந்தனைகளுக்கு உட்பட்டு கணிசமான மலிவான விலையில் தபால் மூலம் அனுப்பப்பட்டது.

இந்தச் சேவையானது புத்தக வெளியீட்டாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நூலகங்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்றோருக்கு கூரியர் சேவைகளுக்கு மாற்றாக மலிவு விலையில் சேவைகளை வழங்கியது. அத்துடன் மானிய விலைகள் மூலம் வாசிப்பு கலாச்சாரத்தை வளர்க்க உதவியது.

மேலும், இதழ்கள் மற்றும் பருவ இதழ்களுக்கு குறைந்த கட்டணத்தையும் அது வழங்கியது.

இந்தச் சேவையை நிறுத்துவதால் போக்குவரத்துச் செலவுகளை கணிசமாக அதிகரித்துள்ளது. பதிப்புத் துறை, புத்தக கடன் வழங்குபவர்கள், நூலகங்கள், வாசகர்கள் மற்றும் மாணவர்களில் பலரை ஏமாற்றமடையச் செய்துள்ளது. இந்த முடிவு இந்தியாவின் வாசிப்பு கலாச்சாரம் மற்றும் எழுத்தறிவு, கல்வி மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கான அதன் உறுதிப்பாட்டை கடுமையாக அச்சுறுத்துகிறது.

ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அவர்களே, இதுபோன்ற முக்கிய சேவைகளை நீக்குவது பொருத்தமானதா? உங்கள் எண்ணங்கள் என்ன? இந்தச் சேவையை மீட்டெடுத்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவீர்களா?

புத்தக அஞ்சல் சேவையை நிறுத்துவதற்கான முடிவு எழுத்தறிவு மற்றும் கல்விக்கான நாட்டின் அர்ப்பணிப்பில் ஒரு குறிப்பிடத்தக்க பின்னடைவைக் ஏற்படுத்தும்.

அறிவைப் பெறுவதற்கான உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும், மேலும் பதிவுப் புத்தகத் தபால் சேவைகள் தகவல்களைப் பரப்புவதை ஊக்குவிப்பதன் மூலம் அதை அணுகுவதற்கு உதவுகின்றன.

இந்தச் சேவையை நிறுத்துவது நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியைத் தடுப்பது மட்டுமல்லாமல், கல்வியறிவு விகிதத்தையும் பாதிக்கும்.

இந்த முடிவு கவலையளிக்கிறது. எனவே பிரதமர் கவனத்திற்குக் கொண்டு சென்று இந்த அத்தியாவசிய சேவையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும்.

பல நூறு கோடி செலவில் சிலைகளுக்கு கணிசமான நிதி ஒதுக்க முடியும் என்றால், அறிவு மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கான அணுகலை வழங்கிடும் அடிப்படை உரிமையை நிலைநிறுத்தும் இது போன்ற சேவைகளை ஏன் ஆதரிக்கக்கூடாது?

இவ்வாறு பி.வில்சன் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்!



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் ஒன்றியம் கருகம்பத்தூர் ஊராட்சி கிராமத்தில் புதிய பேருந்து நிழற்குடையை மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஞானசேகரன், ஒன்றிய பெருந்தலைவர் அமுதா, ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றிய நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

---

### மினி டைடல் பூங்காக்களால் படித்த இளைஞர்களுக்கு மட்டுமின்றி

## அனைத்து மக்களுக்கும் மறைமுக வேலை வாய்ப்புகள்!

### முதல்வரைப் பாராட்டி ‘தினகரன்’ நாளேடு புகழாரம்!

சென்னை, டிச. 31–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களால் படித்த இளைஞர்களுக்கு மட்டுமின்றி அதைச் சுற்றியுள்ள அனைத்து மக்களுக்கும் மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:–

தூத்துக்குடியில் நேற்று தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட ரூ.32 கோடியே 50 லட்சம் செலவிலான தூத்துக்குடி மினி டைடல் பார்க் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இப்பூங்காவானது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி தருவது மட்டுமின்றி, தடையற்ற மின் வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம், உணவுக்கூடங்கள், உடற்பயிற்சி கூடம், கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை கொண்டதாகும். 63 ஆயிரம் சதுர அடியில் 4 தளங்களுடன் பிரமாண்டமாக காட்சியளிக்கிறது.

எல்லோருக்கும் எல்லாமுமாய் என்கிற கோட்பாட்டில் உறுதியாக நிற்கிற திராவிட மாடல் அரசு, சென்னையை தவிர பிற மாவட்டங்களில் நவீன தொழில்நுட்ப புரட்சியை முன்னெடுத்து வருகிறது. அதன் அடிப்படையிலே தூத்துக்குடி, சேலம், தஞ்சாவூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் மினி டைட்டல் பார்க் திட்டத்திற்கு கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் அடிக்கல் நாட்டப்பட்டு, இப்போது தூத்துக்குடியில் அந்த திட்டம் முழுமை பெற்றுள்ளது. ஏற்கனவே தமிழகத்தின் முதல் மினி டைடல் பூங்கா விழுப்புரத்தில் திறப்பு விழா கண்டது. அதை தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் டைட்டல் பூங்காக்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இப்பூங்காக்கள் தகவல் தொழில்நுட்ப சூழலை மேம்ப



தினகரன்

டிசம்பர் 30, 2024 திங்கட்கிழமை

நவீன தொழில் புரட்சி

தூத்துக்குடியில் நேற்று தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட ரூ.32 கோடியே 50 லட்சம் செலவிலான தூத்துக்குடி மினி டைட்டல் பார்க் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இப்பூங்காவானது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி தருவது மட்டுமின்றி, தடையற்ற மின் வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம், உணவுக்கூடங்கள், உடற்பயிற்சி கூடம், கலையரங்கம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை கொண்டதாகும். 63 ஆயிரம் சதுர அடியில் 4 தளங்களுடன் பிரமாண்டமாக காட்சியளிக்கிறது.

எல்லோருக்கும் எல்லாமுமாய் என்கிற

டுத்துவதோடு, சமூக பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்ற உள்ளன.

தமிழகம் இன்று இந்தளவுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றுள்ளதற்கு முன்னாள் முதல்வர் கலைஞர் தான் காரணம் என்றால் மிகையாகாது. கடந்த 1996ம் ஆண்டு முதல் 2001 வரையிலான திமுக ஆட்சிக்காலம் தகவல் தொழில்நுட்ப வரலாற்றில் ஒரு பொற்காலம் எனலாம். எம்பவர் ஐடி என்ற நிகழ்வை ஆண்டுதோறும் நடத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் கிராமங்கள் வரை அப்போது எடுத்துச் செல்லப்பட்டது. எதிர்கால இளைஞர்களின் நலன் கருதி அப்போதே தகவல் தொழில்நுட்பத்துறைக்கு தனி துறை உருவாக்கப்பட்டு, அதற்கு அமைச்சரும் நியமிக்கப்பட்டார். இந்தியாவின் முதல் தகவல் தொழில்நுட்ப பூங்கா சென்னையில் உருவாகிட கலைஞரே காரணமாக இருந்தார்.

தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை முன்மாதிரியாக கொண்டே பின்னாளில், ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு ஹைதராபாத்தை ஐடி நகரமாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாநகரத்திற்கு ஐடி நிறுவனங்கள் வரிசையாக படையெடுத்த நிலையில், அவற்றை மாவட்டங்களுக்கு மடை மாற்றிடும் திட்டங்களும் திமுக அரசால் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் நாங்குநேரி தொழில்நுட்ப பூங்கா, கங்கை கொண்டான் சிப்காட் ஐடி பார்க் உள்ளிட்ட சிலவற்றை தென்மாவட்டங்களில் உதாரணமாக காட்டலாம்.

கலைஞரின் கனவுகளை நிறைவேற்றி வரும் இந்த திராவிட மாடல் அரசும், அவரது வழியில் நவீன தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. தென்மாவட்டங்களில் உள்ள பல இளைஞர்கள் வேலைவாய்ப்புகளுக்காக சென்னைக்கு படையெடுப்பதை தடுக்க, அந்தந்த மாவட்டங்களிலேயே ஐடி பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இப்போது டைடல் பூங்காக்கள் வேலைவாய்ப்பை உள்ளூரிலே பெற்றிட வழிகோலும். தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் நகரங்களான திருச்சி, மதுரை, சேலம் உள்ளிட்ட நகரங்களும் தகவல் தொழில்நுட்பம் அடிப்படையில் வளர்ச்சியை எட்டி வருகின்றன. இத்தகைய மினி டைடல் பூங்காக்கள் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை மட்டுமின்றி, அதை சுற்றியுள்ள மக்களுக்கும் மறைமுக வேலைாய்ப்புகளை உருவாக்கி தரும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுமைப் பெண் திட்டத்தைத் தொடங்கி வைத்ததை முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ம்வகுப்புமுதல் 12ம்வகுப்புவரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தை வேலூர் மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழுத் தலைவர்கள் வீனஸ் நரேந்திரன், யூசுப் கான் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.